செ.வெ.எண்.134 நாள்.01.03.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தாய்லாந்தில் நடைபெற்ற சர்வதேச போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற இந்திய அணியில் இடம் பெற்ற மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்களை சந்தித்து, வாழ்த்து பெற்றனர்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம், மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர் திரு.சுந்தரகணேசன் அவர்கள் தாய்லாந்து, இந்தியா, ஸ்ரீலங்கா ஆகிய மூன்று நாடுகளுக்கிடையேயான சர்வதேச அமர்வு கைப்பந்து போட்டிகளுக்கு தேர்வான இந்திய அணியில் தாம் இடம் பெற்றுள்ளதாகவும், தாய்லாந்தில் இப்போட்டிகள் நடைபெறுவதால், போட்டியில் பங்கேற்க சென்று வர உதவி செய்யுமாறு கோரிக்கை மனு அளித்திருந்தார். அதனை பரிசீலனை செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் உடனடி நடவடிக்கை மேற்கொண்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தன் விருப்ப நிதியிலிருந்து ரூ.59,880/-க்கான காசோலையினை 19.02.2018 அன்று மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வழங்கினார்.

24.02.2018 முதல் 26.02.2018 வரை தாய்லாந்தில் உள்ள பாங்காங்கில் நடைபெற்ற அமர்வு கைப்பந்துப் போட்டியில் இந்திய அணி தங்கப்பதக்கம் வென்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம், உதவி பெற்று, இந்திய அணியில் இடம் பெற்ற திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த மாற்றுத்திறனாளி திரு.சுந்தரகணேசன் அவர்கள் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர் திரு.தவசிராஜன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்களை 28.02.2018 அன்று நேரில் சந்தித்து, வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.